**செய்தி வெளியீடு எண்: 490** **நாள்: 26.07.2018**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 25.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மைத் துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம், திருநாவலூரில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 44 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 28 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டடங்கள், 2 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் 2 மண் பரிசோதனை நிலையக் கட்டடங்கள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 7.8.2014 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ‘‘பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் நவீனத் தொழில்நுட்பங்களை வழங்கவும், முக்கிய இடுபொருட்கள், வேளாண் கருவிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு கருவிகளை இருப்பு வைத்து வழங்கவும், செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் வாயிலாக விவசாயிகளுக்கு விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்து செயல்பாடுகளுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கவும், அனைத்து பயனாளிகளையும் ஒருங்கிணைத்து பன்முக செயல்பாட்டு முனையமாக திகழவும், கருத்துக் காட்சி, விவசாயிகள் பயிற்சி அறை, இடுபொருள் இருப்பு வைத்து விநியோகிக்கும் வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் கட்டப்படும்’’ என்று அறிவித்தார்கள்,

அந்த அறிவிப்பிற்கிணங்க, விழுப்புரம் மாவட்டம், திருநாவலூரில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், புதுக்கோட்டை மாவட்டம் – பொன்னமராவதி, இராமநாதபுரம் மாவட்டம் – கமுதி, திருவண்ணாமலை மாவட்டம் – வெம்பாக்கம், கலசபாக்கம் மற்றும் தண்டராம்பட்டு, திருவாரூர் மாவட்டம் – நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி மற்றும் முத்துப்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் – ரிஷிவந்தியம், கோலியனூர், திருவெண்ணெய்நல்லூர் மற்றும் சங்கராபுரம், கடலூர் மாவட்டம் – மேல்புவனகிரி, குறிஞ்சிப்பாடி மற்றும் நல்லூர், காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர், பெரம்பலூர்

மாவட்டம் – வேப்பூர், தஞ்சாவூர் மாவட்டம் – அம்மாபேட்டை, திருப்பூர் மாவட்டம் – பொங்கலூர், மூலனூர், ஊத்துக்குளி மற்றும் குடிமங்கலம், திருவள்ளூர் மாவட்டம் – பூண்டி மற்றும் எல்லாபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – லால்குடி மற்றும் உப்பிலியாபுரம், நாமக்கல் மாவட்டம் – வசந்தபுரம் ஆகிய இடங்களில் 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 28 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டடங்கள்;

தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம் மற்றும் திருவாரூர் மாவட்டம் – திருவாரூர் ஆகிய இடங்களில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உரக்கட்டுப்பாட்டு ஆய்வகக் கட்டடங்கள்;

நாமக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மண் பரிசோதனை நிலையக் கட்டடங்கள்;

என மொத்தம், 45 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 29 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டடங்கள், 2 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் 2 மண் பரிசோதனை நிலையக் கட்டடங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி. சண்முகம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.வ.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**